# மனித உரிமை மீறலில் இலங்கைக்கு முதலிடம்

(லண்டன்)
உலகில் இலங்கை ஒரு சிறிய நாடாக இருந்தாலும் மனித உரிமைகள் இலங்கையில்தான் அதிகளவு மீறப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
(4-ம் பக்கம் பார்க்க)


விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 1 இதழ் 2
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 12 — 02 — 1993


## 200 கோடி ரூபாவால் யுத்தச் செலவு அதிகரிப்பு

(கொழும்பு)
வடக்கு-கிழக்கு யுத்த செலவு 200 கோடி ரூபாவினால் அதிகமாகியுள்ளது என பிரதமர் டி. பி. விஜேதுங்க தெரிவித்துள்ளார்.

## லலித் கட்சியில் குழப்பம் காமினி திணறல்!

(கொழும்பு)
தலைமைத்துவ போட்டியில் தான் வெற்றி பெற்றுள்ளதாக டி. யு. என். எவ். உப தலைவர் திரு. லலித் அத்துலத்முதலி கூறியுள்ளாராம்.
[illegible] சித் தலைமையை தனது
(4-ம் பக்கம் பார்க்க)

# தடுப்பு முகாம்களில் உள்ளவர்களின் விபரங்களை படையினர் நீதிமன்றத்துக்கு அறிவிக்கவேண்டும்

(கொழும்பு)
எவரையும் கைதுசெய்வதற்கான ஜனாதிபதியிடம் இருந்த அதிகாரம் நீக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புப் படையினர் நீதிமன்றத்துக்கு உடன் தெரியப்படுத்தவேண்டும்.
இதன்படி தடுப்பு முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டிருப்போரின் விபரங்களை பாதுகாப்பு
அவசரகால சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் மூலம் இதற்கு வழி செய்யப்பட்டுள்ளது.
அவசரகால திருத்தச் சட்டத்தின்படி இனிமேல் இராணுவத்தினாலோ அல்லது பொலிசாரினாலோ கைதுசெய்யப்படுபவர் இருநாதங்களுக்கு
(4-ம் பக்கம் பார்க்க)

# இல. தமிழரின் இன்னல்குறித்து ஐ. நா. அதிகாரியிடம் தெரிவிப்பு

(கொழும்பு)
இலங்கைத் தமிழரின் இன்னல் பற்றியும் அவர்கள்மீது ஸ்ரீலங்கா இராணுவத்தினரும், ஊர்காவற்படையினரும் கட்டுமிரண்டித்தனமான மனித உரிமைமீறல் செயல்களில் ஈடுபடுவது பற்றியும் ஐ. நா. அதிகாரியிடம் உலகத்தமிழர் எடுத்துக்கூறியுள்ளனர்.

ஜெனிவாவில் உள்ள ஐ. நா. அதிகாரிகளை இவர்கள் சந்தித்து இலங்கை தமிழர் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக ஆதாரங்களுடன் எடுத்து விளக்கியுள்ளனர்.
ஜெனிவாவில் அடுத்த வாரம் நடைபெறவிருக்கும் ஐ. நா. சபையின் மனித உரிமைக்கூட்டத்தில் இலங்கை இராணுவத்தின் மனிதஉரிமை மீறல்கள் பற்றி விரிவான விவாதம் ஒன்று நடைபெறவுள்ளது.
மனித உரிமைச் சட்டங்களை இலங்கை மீறவில்லை என்பதை உலக நாடுகளுக்கு காண்பிக்கும் முகமாகவே இலங்கை
(4-ம் பக்கம் பார்க்க)

## புலோலியில் நேற்று ஆர்ப்பாட்ட பேரணி

(யாழ்ப்பாணம்)
தமிழ் மக்கள் மீது ஸ்ரீலங்கா அரசு மேற்கொண்டு வரும் பொருளாதார தடைகளை கண்டித்து நேற்று புலோலியில்
(4-ம் பக்கம் பார்க்க)

## அமைதிக்கு அச்சுறுத்தல்

- சிறிமாவோ

(கொழும்பு)
பத்திரிகைகள் மீதும் பத்திரிகையாளர்கள் மீதும் ஸ்ரீலங்கா அரசு மேற்கொண்டுவரும் பல்வேறு விதமான அழுத்தங்கள் இந்த நாட்டின் ஜனநாயகத்துக்கும், அமைதிக்கும் ஏற்பட்டுள்ள ஓர் அச்சுறுத்தலாகும்.
(4ம் பக்கம் பார்க்க)

# மனித உரிமை குழுக்கள் அரசுக்கு வலியுறுத்து

(கொழும்பு)
இராணுவம் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யும் பொதுமக்களின் விபரங்களை உடனடியாக வெளியிடவேண்டும் என்று மனித உரிமை குழுக்கள் தற்போது இலங்கை அரசை வலியுறுத்தியுள்ளன.
அரசு தற்போது திருத்தியுள்ள இராணுவச் சட்டப்படி இராணுவம் ஒருவரை கைது செய்தால் அவரின் நெருங்கிய உறவினர் இராணுவத்தை அணுகினால் மட்டுமே அவரின் விபரங்களைத்
(4-ம் பக்கம் பார்க்க)

## உணவுத்தட்டுப்பாடு: அகதி முகாம்களில் உள்ளோர் இன்னல்

(யாழ்ப்பாணம்)
யாழ் குடாநாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள உணவுத்தட்டுப்பாட்டினால் அகதி முகாம்களில் வாழ்வோர் பெரிதும் இன்னலுறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
இம்முகாம்களில் உள்ளோர் உணவு நெருக்கடியினால்
(4-ம் பக்கம் பார்க்க)

## கிளாலி - பூநகரி படகுசேவை

(யாழ்ப்பாணம்)
கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று 12ம் திகதி வழமையான நேரத்திற்கு நடைபெறுமென்பதை தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறை அறிவித்துள்ளது.

## பலாலியில் விடுவிக்கப்பட்டது புலிகள் அல்ல

-பிரதமர்

(கொழும்பு)
சுதந்திர தினத்தன்று பலாலியில் வைத்து விடுவிக்கப்பட்ட தமிழ் இளைஞர்கள் விடுதலைப்புலிகள் அல்ல என பிரதமர் விஜயதுங்க கூறியுள்ளார்.
சுதந்திர தினத்தையொட்டி
4-ம் பக்கம் பார்க்க)

## தேர்தல் சட்டத்தில் திருத்தம்: அ. முகாம்களில் உள்ளவரும் வாக்களிக்க வசதி

(கொழும்பு)
அகதி முகாம்களில் தங்கியுள்ளவர்களும் மாகாண சபைத்தேர்தல்களில் வாக்களிக்க சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது.
சொந்த இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து தற்போது நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள அகதி முகாம்களில் தங்கியிருப்பவர்களும் எதிர்வரும் மாகாண சபைத்தேர்தலில் வாக்களிக்க மாகாண சபை சட்ட மூலத்தில் திருத்தத்தை அரசு கொண்டுவரவுள்ளது.
(4-ம் பக்கம் பார்க்க)

## சர்வதேச அமைப்புக்களின் நெருக்கடிகளுக்கு அரசு அடிபணியாது

(கொழும்பு)
உலக வங்கியிடமோ அல்லது வேறு சர்வதேச அமைப்புகளினதோ வற்புறுத்தலுக்கு இலங்கை அரசு அடிபணிந்து போகாதென பிரதமர் திரு. டி.பி. விஜயதுங்க நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றத்தில் அவர் மேலும் கூறுகையில்; கல்வி, மற்றும் சுகாதார சேவைகள் தொடர்ந்தும் இலவசமாகவே வழங்கப்படும். சர்வதேச நாணய நிதியம், உலகவங்கி
(4-ம் பக்கம் பார்க்க)

## மாணவர்களுக்கு கட்டாய ராணுவபயிற்சி தேவை

- அஷ்ரப்

(கொழும்பு)
நாட்டிலுள்ள சகல பாடசாலை மாணவர்களுக்கும் கட்டாய இராணுவப்பயிற்சி வழங்கப்படவேண்டுமென முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் எம். எச். எம். அஷ்ரப் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.
தேசத்திற்காகப் போராட சகல இலங்கையர்களுக்கும் கட்டாய இராணுவப் பயிற்சி
(4ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் அறிக்கைக் கொப்பி தாவடிக்கும் - நாச்சிமார் கோவிலடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் செ. பரமநாதன் தாவடி என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (இ-7221)

## எழுதுவினைஞர் நியமனம் இல்லை

(யாழ்ப்பாணம்)

எழுதுவினைஞர் நியமனம் எதுவும் தற்போது வழங்கப்படமாட்டாது என யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

எழுதுவினைஞர்களைத் தெரிவு செய்வதற்காக ஏற்கனவே நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் சித்தியெய்தியவர்களுக்கு இன்னமும் நியமனம் வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (153-இ)

## உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வறிய மக்களுக்கான அத்தியாவசியப் பொருட்களின் மலிவு விற்பனை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகத்தின் வர்த்தகப் பகுதியினால் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகின்றது. இதன் படி இருபாலை கொலனி, இன்று மாலை 4-00 மணி உரும்பராய் செல்வபுரம், நாளை காலை கரவெட்டி இராசா கிராமம், நாளை மாலை 4-00 மணி மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டம் ஆகிய கிராமங்களில் இவ்விநியோகம் நடைபெறும். (ரி)

## இராசி பலன்

**12-02-1993**

**வெள்ளிக்கிழமை**

**(தமிழுக்கு மாசி 1)**

ஷஷ்டி பி. ப. 4-59 வரை, சித்திரை காலை 7-45 வரை, சித்தயோகம், இராகுகாலம் காலை 11-04 முதல் 12.34 வரை, சுபநேரம் காலை 6-34 முதல் 8-04 வரை.

மேஷம்: வித்தையில் வல்லமை, காரிய சித்தி, மன்னிக்கும் சுபாவம்.

இடபம்: தர்மசிந்தனை, பண வரவு, தொழில் சிறப்பு.

மிதுனம்: கருத்து முரண்பாடு, வீண் வம்பு, தொழில் சிக்கல்.

கடகம்: குடும்ப சிக்கல், மனவேதனை, பிறர் துன்பம்.

சிங்கம்: தொழில் லாபம், வாக்குவசிகரம், மகிழ்ச்சி.

கன்னி: தற்பெருமை, பல சோதனை, உடல் தளர்ச்சி.

துலாம்: பொதுப்பணி, நல்லெண்ணம், சுபகாரிய செலவு.

விருச்சிகம்: வாழ்க்கை கஷ்டம், ஆன்மீக ஈடுபாடு, தடுமாற்றம்.

தனுசு: சமுதாய அந்தஸ்து பிறர் ஆசீர்வாதம், குடும்ப சுகம்.

மகரம்: தொழில் முதலீடு, பழைய சிந்தனை, விடா முயற்சி.

கும்பம்: துபரமான நிலை, சகோதர வெறுப்பு, வீண் கோபம்.

மீனம்: நிதான மிழத்தல் இரத்த அழுத்தம், பழிவாங்கல்.

ஜோஸ்யர்

## முப்பது லட்சம் ரூபாவிற்கு ஆயுள்வேத மருந்துகள் அனுப்ப நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

30 லட்சம் ரூபா பெறுமதியான ஆயுர்வேத மருந்து வகைகள் யாழ். மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன. இதற்கான அனுமதியைக் கூட்டுப்படைத் தலைமையகம் வழங்கியுள்ளது.

இத்தொகையில் 15 லட்சம் ரூபாவை, வடகிழக்கு மாகாண சபையிடமிருந்து பெற்றுத் தருமாறு ஆயுள் வேத மருந்துகள் கூட்டுத்தாபனம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடம் கோரியுள்ளது (159-ரி

### கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்தில் புனர்வாழ்வு சம்பந்தமான கூட்டம், யாழ். அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் 93ம் ஆண்டுக்கான புனர்வாழ்வுப் பணிகள் குறித்து ஆராயப்பட்டன. (159)

## அறிவித்தல்

### இடம் பெயர்ந்த தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களுக்கு

தங்களுக்கு இதுவரையிலும் தொழில் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படாது விடின் யாழ்ப்பாணம் இலக்கம்: 499, காங்கேசன்துறை வீதியில் உள்ள வடமாகாண தெ. ப. பொ. கூ. சங்கங்களின் சமாசத்துடன் தொடர்பு கொண்டு பதிவு செய்யவும்.

பொது முகாமையாளர்
வடமாகாண தெ. ப. பொ. கூ. ச. சமாசம்
யாழ்ப்பாணம்

(ஏ-2870)

## பற்றீஷன் தொழிற் பயிற்சி நிறுவனம்

## PATRICIAN INSTITUTES

### அகில உலக கெயர் மரவேலை, கட்டுவேலை

## பயிற்சி நெறிகள்

அகில உலக கெயர் (Care International) ஸ்தாபனத்துடன் இணைந்து எம்மால் நடாத்தப்படும் மேற்படி பயிற்சிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பயிற்சித்தகைமை:**

15 வயதும் அதற்கு மேற்பட்டோரும்
8-ம் வகுப்பும் அதற்கு மேற்பட்டோரும்

**பயிற்சிக் காலம்:** 2 ½ மாதங்கள்

**கொடுப்பனவு:** ஸ்தாபனப் பயிற்சியின் போது (2½ மாதங்கள்) மாதம் 600/-வும், பயிலுனர் பயிற்சியின்போது (10 மாதம்) வேலைக்குப் பொருத்தமான சம்பளமும் வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி: 19 - 02 - 1993

நேர்முகப்பரீட்சை திகதி: 20 - 02 - 1963 காலை 9-00 மணி

விண்ணப்பங்கள் யாவும்,

பதிவாளர்,
பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனம்,
59, சென். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

என்ற முகவரியில் நேரில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

## வாகன தகுதிச் சான்றிதழ் - 1993

### FITNESS CERTIFICATE FOR MOTOR VEHICLE 1993

1993 -ம் ஆண்டிற்கான மோட்டார் வாகன தகுதிச் சான்றிதழ், திரு A.S குணசீலன் (Automobile Engineer) அவர்களால் எமது ஸ்தாபனத்தில் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

REGISTRAR,
Patrician Industrial Institute.
59, St. Patricks Road,
Jaffna.

(ஏ-2871)

## வாரியார் - பிரேமா கொழும்பில் சந்திப்பு

(கொழும்பு)

கொழும்பு வரும் அருள் மொழியரசு திருமுருக கிருபானந்தவாரியார் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவையும் சந்திப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இன்று காலை வாரியார் அவர்கள் கொழும்பு வருகிறார். கொழும்பின் பல பகுதிகளிலும் இவர் கதாப்பிரசங்கங்களை நடாத்துவதுடன் பிரேமதாஸாவை சந்தித்து பேசவுமுள்ளார். (பீ-சி)

## அரசியல் தீர்வு பின்தள்ளப்படுகிறது

(கொழும்பு)

சிறிலங்கா அரசின் தற்போதைய நடவடிக்கைகள் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சிகள் ஒத்திவைக்கப்படும் போக்கையே எடுத்துக் காட்டுவதாக அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வெதனையும் முன்வைக்காத அரசாங்கம் புதிதாக ஆயுதங்களைக் கொள்வனவு செய்துவருகிறது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முயற்சி செய்யாமல் இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்ந்து அப்பாவிப் பொதுமக்களைப் பலிகொள்வதாகவே அமையுமென்றும் அவ்வட்டாரங்கள் எச்சரித்துள்ளன. (பீ-சி)

### அகில இலங்கை

## இளங்கலைஞர் மன்றத்தின் 13வது இசைவிழா

இடம்: **மன்ற கலாமண்டபம்**
சட்டநாதர் வீதி, நல்லூர்

**4-ம் நாள் 12-02-93 வெள்ளி**

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கத்தின் ஆதரவில்

மாலை 4-00 — 5-00 மங்கள இசை

நாதஸ்வரம்: மி. சுதந்திரன், எ. பாலகிருஷ்ணன்
தவில்: எ. சின்னக்கணேசு, கே. விக்னேஸ்வரன்

5-00 — 5-10 மிருதங்க இசை
சரஸ்வதி இசை மன்ற மாணவர்கள்

5-10 — 5-30 பாட்டு பாரதிகானசபா மாணவிகள்
பாட்டு: பொ. சயந்தினி — செ. காஞ்சனு
க. கீர்வாணி — செ. கௌரீஸ்வரி
தெ. அகிலா — செ. கவிதா
வயலின்: வி. கௌரி
மிருதங்கம்: சதா வேல்மாறன்

5-30 — 6-00 வீணை உதயந்தி வாமதேவன்
மிருதங்கம்: பி. ரதிரூபன்

6-00 — 6-45 வயலினிசை எ. ஜெயராமன்
மிருதங்கம்: எஸ். நாகராஜன்
கடம்: சதா வேல்மாறன்

6-45 — 7-00 மங்கள விளக்கேற்றல்
திரு. கு. ராமச்சந்திரன் (வர்த்தகர்)
திரு. தி. சுந்தரலிங்கம்
(தலைவர், ஊர்காவற்றுறை எம். பி. சி. எஸ்.)
திரு. ம. யோகலிங்கம் (வர்த்தகர்)

தலைவர்: திருமதி காங்கேயன்
(அதிபர், மங்கையர்க்கரசி வித்தியாசாலை)
சிறப்பு விருந்தினர்: திருமதி தி. நாகராஜா
(அதிபர், இந்து மகளிர் கல்லூரி)

7-00 — 8-00 இசைக்கச்சேரி
பாட்டு: எம். வர்ணகுலசிங்கம்
வயலின்: எஸ். வெங்கடேஸ்வரசர்மா
மிருதங்கம்: வர்ணராமேஸ்வரன்

8-00 — 8-45 நாடகம்
நீராவியடி கலைக் கல்லூரி வழங்கும்
புலவர் முத்து ராசரெத்தினத்தின் நெறியாழ்கையின் கீழ்
இலங்கை வேந்தன் பங்கு பற்றும்
"பண்டார வன்னியன்"

8-45 — 9-45 காளிகோயில்
இந்து இளைஞர் மன்றம் வழங்கும்
"காத்தவராயன்" சிந்து நடைக் கூத்து

வாழ்த்துகிறோம்

## நியூ லிங்கம் ஸ்ரோர்ஸ்

திருநெல்வேலி மார்கட்.

(ஏ-2861)

நல்லூர் கிளை நூலகம்
நகர அபிவிருத்தி மன்றம்
யாழ்ப்பாணம்

★ இலங்கையில் தொடரும் போரினால்

# 10 லட்சம் குழந்தைகள் ஆபத்தான நிலையில்

## சர்வதேசத்திடம் 'யுனிசெவ்' உதவி கோருகிறது

இலங்கையின் உள்நாட்டுப்போர் மற்றைய இடங்களில் நடைபெறும் சண்டைகளைப் போலன்றி நாகரீகமாக நடைபெறுவதாக கடந்த ஆண்டு இலங்கை வந்திருந்த 'யுனிசெவ்' அமைப்பின் நிர்வாக இயக்குனர் திரு ஜேம்ஸ் கிரான்ட் கூறியிருந்தார். இலங்கையில் துன்பத்தில் ஆழ்ந்திருப்போருக்கு இவரது கூற்று பெரும் கிளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு முன்னாள் கொழும்பு பி.பி.சி முகவர் கிறிஸ் மொறிஸ் கூறியுள்ளார் அவர் மேலும் கூறுகையில் எந்தப் போரும், எந்தச் சண்டையும் நாகரீகமானது அல்ல. பல்லாண்டுகளாக ஆயிரக்கணக்கான இலங்கை மக்கள் [illegible] உணவையுடன் அன்றாட வாழ்வை நடாத்தி வருகிறார்கள்.

வடக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் 1990 முதல் மின்சாரம் இல்லை இராணுவ தடைகளால் உணவுப்பொருள் மருந்து, மண்ணெண்ணெய் மற்றும் எரிபொருள் கிடைப்பது மிக அரிது மீன்பிடி கைத்தொழில் என்பவற்றைச் செய்து வந்த ஆயிரக்கணக்கான மக்கள் தொழிலின்றித் தவிக்கிறார்கள்.

கடற்படையின் தடையால் கடலில் மீன்பிடிக்க மீனவர் செல்வதில்லை. டீசல் மற்றும் எரிபொருள் இல்லாததால் பெருமளவு விவசாயம் தடைபட்டுள்ளது. மொத்தத்தில் பொருளாதார அமைப்பின் அடிப்படையே நிலைகுலைந்து போயுள்ளது. கடந்த சில ஆண்டுகளில் பல ஆயிரக்கணக்கான கட்டிடங்கள் இடிந்து பாழடைந்துள்ளன.

இந்தப் போரில் உணவு ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. வடக்குப் பகுதியை அரசு இன்னமும் இலங்கையில் ஒரு பகுதியாக கருதி வருகிறது என்பதை வலியுறுத்துவதற்காக அரசு குறிப்பிட்ட அளவு உணவுப் பொருட்களையே அனுப்புகிறது.

அங்கே உள்ள விடுதலைப் புலிகளையும், மக்களையும் பட்டினி போட்டுப் பணியவைக்க விரும்பும் இராணுவத் தலைமைப்பீடத்திற்கு இது அதிருப்தியாகவே உள்ளது ஆனால் அரசு மனிதாபிமான அடிப்படையில் செயல்படுகிறது என்று மக்களுக்கு விளக்க இந்த உதவி போதுமானதாயில்லை இந்த முறையில் அரசு வெற்றிபெற முடியாது.

விடுதலைப் புலிகளும் அரசை நம்புவதாயில்லை அரசு பொதுமக்கள் மீது பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது என கூறும் அதேநேரத்தில் இந்தப் பகுதியில் அரசு அனுப்பும் உணவுப் பொருட்களுக்குத் தேவை இருக்கும் வரை தான் புலிகள் இவற்றை அங்கு அனுமதிப்பார்கள். வடபகுதியில் உணவைப் பொறுத்தவரை தன்னிறைவு அடையச் செய்து வருகிறார்கள்.

கூட்டுப்பண்ணை முறையிலான பாரம்பரிய சாகுபடி முறைகளாலும் ஒவ்வொரு அங்குல நிலத்தையும் இதற்காகப் பயன்படுத்தி வருகிறார்கள்.

தன்னிறைவு அடைந்து விட்டால் கொழும்பிலிருந்து அரசு அனுப்பும் பொருட்களை அவர்களே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

அரசு அனுப்பும் பொருட்கள் எல்லாம் யாழ்ப்பாணத்தை அடைந்து விடுவதில்லை. அதில் கணிசமான பகுதி தெற்கே கறுப்புச் சந்தைக்கு சென்று விடுகிறது. கப்பலில் அனுப்பப்பட்ட பொருட்கள் இவ்வாறு வேறு எங்கோ சென்றுவிட்டது குறித்துப் பொலிஸ் விசாரணை நடைபெறுகிறது.

யாழ்ப்பாணத்தில் மக்கள் பட்டினியாய் இல்லை என அரசு கூறுகிறது. ஊட்டச்சத்து நெடுங்காலப் பிரச்னையாகத் தொடர்கிறது இங்கு வரும் உணவு உயிர்வாழ மட்டுமே போதுமானதாக இருக்கிறது. யாழ்ப்பாண ஆஸ்பத்திரிகளில் மருத்துவ வசதியே இல்லை மக்களின் ஆரோக்கியம் குன்றி வருகிறது.

கடந்த மே மாதம் முதல் நவம்பர்வரை 12 வயதிற்கு குறைவான ஆயிரத்திற்கும் மேற்பட்ட பிள்ளைகள் இறந்துவிட்டனர். ஊட்டச்சத்துக் குறைவும் மருந்துகள் இல்லாமையுமே இதற்குக் காரணம். பெருகிவரும் அகதிகள் தொகையால் பரவும் நோய்களை எதிர்க்கும் சக்தி குழந்தைகளிடம் இல்லை. நோய்க்கு மருந்துகளும் இல்லை.

வயிற்றுப் போக்கு, மலேரியா, கொலரா குழந்தைகளிடம் பெருகியுள்ளது. மருத்துவ சுகாதார சேவைகளால் சமாளிக்க முடியவில்லை. அவர்களிடம் இதற்கான வசதிகளும் குறைந்துவிட்டன. குழந்தைகளின் உடல் போக்கிலும், உள்ளப்போக்கிலும் இந்தப்போரினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து டாக்டர்கள் கவலைப்படுகிறார்கள்!

கிழக்கில் இராணுவப்பிடியிலுள்ள பகுதிகளில பகலில் தான் ஓரளவு சாதாரணநிலை; ஆனால் கிராமங்களில் புலிகள் இருப்பதாகக் கருதப்படும் இடங்களுக்கு உணவும் மருந்தும் அனுப்பப்படுவதேயில்லை. கிழக்கின் பெரும்பகுதி பெரும் பொருளாதார சீரழிவிலிருக்கிறது. பல ஆயிரக்கணக்கான மக்கள் வீடிழந்து, வேலையிழந்து பரிதவிக்கின்றனர். முழுமையான நிவாரணம் கிடைப்பதில்லை.

கடந்த டிசம்பரில் ஏற்பட்ட புயலும் மழையும் நிலைமையை இன்னும் மோசமாக்கிவிட்டன. இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் வீடிழந்தனர். பெருமளவு நோய்கள் பரவின. இவை தவிர தென்னிந்தியாவிலிருந்து பல ஆயிரம் அகதிகள் திரும்பி வரவுள்ளனர் இவற்றில் நிலைமை மேலும் மோசமடையக்கூடும். ஒரு பாவமும் அறியாதவர்கள் தொடர்ந்து துன்பப்படுகிறார்கள்.

இலங்கையில் 10 லட்சம் குழந்தைகளுக்கு மேல், ஊட்டச்சத்து குறைவால் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே சர்வதேச அளவில் உதவிகள் கோரி 'யுனிசெவ்' அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது என்றார். (கி)

---

## இளாலி கடலில் படகுகள் பிடிபட்டனவாம்

(கொழும்பு)

இளாலி கடற்பரப்பில் ஆறு படகுகளும் ஏழு இயந்திரங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை இரவு கிளாலி நோக்கிச் சென்றுகொண்டிருந்த இருபது படகுகள் படையினரால் வழிமறிக்கப்பட்டதென்றும் இப்படகுகள்மீது கடற்படையினர் தாக்குதல் நடத்தி கைப்பற்றினராம். (பி.இ)

## இனப்பிரச்னை தீர்வுக்கு பேராசிரியர் திட்டம்

(கொழும்பு)

கனடாவிலுள்ள வின்ட்ஸர் பல்கலைக்கழக சட்டத்துறைப் பேராசிரியர் லஷ்மன் மாரசிங்க இனப் பிரச்னையைத் தீர்த்துவைக்கக் கூடியதாக ஒரு அரசியலமைப்பு திட்டத்தை வெளியிட்டுள்ளார்.

''சைப்பிரஸ் மொடல்'' என்று கூறப்படும் இன அடிப்படையிலான சட்டசபைகளை அமைப்பதே பேராசிரியர் லஷ்மன் மாரசிங்கா தெரிவிக்கும் யோசனைகளில் ஒன்றாகும்.

இந்தப் புதிய திட்டத்தில் ஏழு அமைப்பு முறைகளை பேராசிரியர் வெளியிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ரி-சி)

## 300 ரூபா அலவன்ஸ் ஓய்வூதியர்களுக்கு இல்லை

(யாழ்ப்பாணம்)

வடபகுதி ஓய்வூதியர்களுக்கு வரவு செலவுத்திட்டத்தில் அதிகரிக்கப்பட்ட 300 ரூபா அலவன்ஸ் இம்முறை அதிகரிக்கப்படவில்லை.

பெப்பிரவரி மாத பென்சன் வவுச்சர்கள் யாழ். செயலகம் வந்துள்ளது.

இதில் அதிகரிப்பு செய்யப்பட்ட 300 ரூபா அலவன்ஸ் சேர்த்துக்கொள்ளப்படவில்லை (71-ரீ-சி)

## தென்பகுதியில் மீண்டும் ஜே.வி.பி. நடவடிக்கை

(கொழும்பு)

தென்பகுதியில் மீண்டும் ஜே. வி. பி யினரின் அட்டகாசம் ஆரம்பமாகியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாத்தறை, அம்பாந்தோட்டை, திசமஹாராம ஆகிய பகுதிகளிலேயே இவர்களின் நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளதாகவும், பொலிஸார் இப்பகுதிகளில் தீவிர ரோந்துப் பணிகளில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-ரி)

> மனையினைச் சுற்றி ஒரு பிடி நிலமும்
> மிதிபடா வண்ணம்பயிரினை வைப்போம்.

## இன்று

(யாழ்ப்பாணம்)

சங்கானை வெல்லில் ஸ்ரீ சிவ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான மண்டலாபிஷேகப் பூர்த்தி இன்று 12ந் திகதி காலை வெள்ளிக்கிழமை சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி மாலை திருக்கல்யாண வைபவமும் திருவூஞ்சலும் இடம்பெறும். சுவாமி பூந்தண்டிகையில் வீதியுலா வந்து அருள்பாலிப்பார்.

## நாளை

(யாழ்ப்பாணம்)

பன்னாலை மகளிர் கிராம கடனுதவி கூட்டுறவுச்சங்கத்தின் கூட்டமொன்று நாளை மாலை 2-00 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது மாலை 3-00 மணிக்கு பன்னாலை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் கூட்டமும் நடைபெறவுள்ளது.

## யாருடையது?

10ம் திகதி காலை இரண்டு வயர் பேக்குகளில் ஒரு பேக்கில் திரு. நீ. பிரான்சிஸ் உடையார் வீதி, குருநகர் மேற்கு யாழ்ப்பாணம் என்பவரது உலர்உணவு அட்டை மற்றைய பேக்கில் றேஸ் மலர் பிரான்சீஸ் குருநகர் என்பவருடைய விஷேச வைத்திய பரிசோதனை குறிப்பு புத்தகமும் எஸ். ரீ. மெடிக்கல் திரு. சேனாதிராசாவினால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளவும்

## திருடன் பிடிபட்டான்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் இரவு வேளையில் மின் கம்பிகளை வெட்டித் திருடிய கோஷ்டியைச் சேர்ந்த திருடனொருவன் கையும் மெய்யுமாக வைத்தியசாலைக் காவலாளியால் துரத்திப் பிடிக்கப்பட்டு தமிழீழ காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டான்.

## இராணுவ சிப்பாய்கள் அரசுக்கு வற்புறுத்து

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்திலுள்ள மைலந்தனைக் கிராமத்தில் கடந்த ஆகஸ்ட் மாதம் 25-க்கும் மேற்பட்ட தமிழர்களை படுகொலை செய்தது தொடர்பாக கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளன. இருபது இராணுவத்தினரையும் விடுதலை செய்யக் கோரியும் இல்லாவிடில் இராணுவ நீதி மன்றத்தில் ஆஜர் செய்யும்படி கேட்டும் உயர் இராணுவ அதிகாரிகளை சிப்பாய்கள்

4-ம் பக்கம் பார்க்க)

தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின்

ஆளணித் தேவைகளை நிறைவேற்ற தொழில் வங்கி ஒன்று நிரப்புவதற்கான

விண்ணப்பங்கள்

பதவிகள்:

01. வடிசாலை தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்
02. வடிசாலை கொதிகலன், வடிகலன் இயக்குனர்.
03. கைத்தொழில் உற்பத்தி நிலையத்தின் பொறுப்பாளர்கள்.
04. வெல்ல நிலையப் பொறுப்பாளர்கள்.
05. உட்துறை எண்பார்வை பயிற்சியாளர்கள்.
06. கள்ளி நிர்வாக உத்தியோகத்தர்.
07. கணக்குப் பதிவாளர்.
08. கணக்கு இலிகிதர்.
09. தட்டெழுத்து, சுருக்கெழுத்தாளர் தமிழ்

மேற்படி பதவிகளுக்கான கீழ்வரும் குறைந்த பட்ச தகுதி உடையோர் பதிவு செய்து கொள்ள விண்ணப்பங்களை 20 2 93க்கு முன்பாக பொதுமுகாமையாளர், வடமாகாண தெ. ப. பொ. கூ. ச. சமாசம் இல: 499, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிட்டு அனுப்பி வைக்கவும்.

குறைந்த தகைமை:

1. க. பொ. த. (சாதாரணம்) கணிதம், தமிழ் உட்பட 6 பாடங்களில் திறமைச் சித்தி
2. துறைசார் அனுபவமும், கூட்டுறவுக் கல்லூரிப் பயிற்சியும், துறைக்குப் பொருத்தமான விஞ்ஞான பாடங்களில் சித்தி.

பொது முகாமையாளர்,
வடமாகாண தெ.ப.பொ.கூ. சங்கங்களின் சமாசம்
499, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(ஏ-2874)

# 4 கப்பல்களில் கிரமமாக உணவு அனுப்ப ஏற்பாடு

(கொழும்பு)

பருத்தித்துறைக்கும் கொழும்புக்குமிடையே 4 கப்பல்கள் உணவுப் பொருள்களைக் கொண்டுசெல்லும் பணியில் கிரமமாக ஈடுபடவுள்ளதாக புனர்வாழ்வு புனர்நிர்மாண நலத்துறை அமைச்சு செயலாளர் கிறிஸ்ட் டி சில்வா தெரிவித்துள்ளார்.

யாழ் குடாநாட்டிற்கு அடுத்த வாரம் உணவுப் பொருள்களை விநியோகிப்பதற்காக இரு கப்பல்கள் 5,000 தொன் உணவுப்பொருள்களுடன் வட பகுதிநோக்கி சென்றுகொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

இதற்கிடையில் 300தொன் உணவுப் பொருள்களுடன் பருத்தித்துறை சென்ற கப்பலில் தற்பொழுது உணவுப் பொருட்கள் இறக்கப்பட்டுக்கொண்டிருப்பதாகவும் வாடகைக்கு அமர்த்தப்பட்ட மேலும் ஒரு கப்பலில் 3000 தொன் உணவுப் பொருட்களை அனுப்ப அமைச்சு நடவடிக்கை எடுத்துவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-ஊ)

## கிராமசேவையாளர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

கிராமசேவையாளர் நியமனம் பற்றி எதிர்வரும் இருபதாம் திகதியின் பின்னர் முடிவெடுக்கப்படும்.

இம்மாதம் 20ம் திகதிக்கு முன்பாக வடக்கு-கிழக்கு மாகாண சபையிலிருந்து சில உயரதிகாரிகள் யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

இவர்கள் வந்து சேர்ந்ததும் கிராமசேவையாளர் நியமனம் பற்றி முடிவெடுக்கப்படும். (159-இ)

### சர்வதேச

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யுடன் புதிய உறவுகள் வளர்ந்துள்ளன.

தனியார் கல்வித்துறையை விருத்தி செய்வதோ, சட்டங்களை அறவிடுவதோ அரசின் நோக்கமல்ல என்றும் கூறினார். (சி-இ)

### இராணுவ சிப்பாய்கள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வலியுறுத்தி வருகிறார்கள்.

மைலந்தனைப் படுகொலை தொடர்பாக விசாரணை நடத்திய இராணுவ உயர்பீடம் புனானை முகாமைச் சேர்ந்த இருபது இராணுவத்தினரை கடந்த ஐந்து மாத காலமாக தடுத்து வைத்துள்ளது. இதனை ஆட்சேபித்தே ஏனைய இராணுவத்தினர் அவர்களை விடுதலை செய்யுமாறு இராணுவ அதிகாரிகளை நெருக்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (ரீ-சி)

### மாணவர்களுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்படவேண்டும் 15, 16 வயதை அடைந்த ஒவ்வொரு மாணவனுக்கும் இராணுவப் பயிற்சி அளிக்கப்பட்டு நாட்டைக்காக்க தயார் செய்ய வேண்டுமெனவும் ஜனுப் அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

### உணவுத் தட்டுப்பாடு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போஷாக்கின்மைக்கு உட்படுவதோடு நோய்களுக்கு ஆளாகும் அபாயமும் ஏற்பட்டுள்ளதாகக்கூறப்படுகிறது

இதேவேளையில் யாழ் குடாநாட்டில் தற்பொழுது 2 லட்சத்து 65 ஆயிரத்து 694 பேர் இடம்பெயர்ந்து அகதி முகாம்களிலும் உறவினர்கள், மற்றும் நண்பர்களது வீடுகளிலும் தங்கியுள்ளதாக அரச சார்பற்ற நிறுவனங்களின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

## துப்பாக்கி அனுமதிப் பத்திரங்கள்

(யாழ்ப்பாணம்)

தமிழ்ப் பிரதேசத்தில் பொதுமக்கள் எவராவது தமது பிரத்தியேக பாவனைக்காக வைத்திருக்கும் வேட்டைத்துப்பாக்கி, கட்டுத்துப்பாக்கி, கைத்துப்பாக்கி போன்ற சகலவிதமான துப்பாக்கிகளையும் தம்முடன் வைத்திருப்பதற்கான அனுமதிப் பத்திரங்களை எதிர்வரும் 28 ம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு தமிழீழ காவல்துறை அறிவித்துள்ளது.

இவ் அனுமதிப் பத்திரங்களை பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்களை சகல காவல்பணிமனைகளிலும் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### லலித் கட்சி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கையில் வைத்திருப்பதுடன் அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான பட்டியலையும் தாம் வைத்திருப்பதாக திரு. அத்துலத்முதலி கூறியுள்ளாராம்.

இதனையடுத்து திரு காமினி திஸநாயக்கா செய்வதறியாதிருப்பதாகவும் கூறப்படுகிறது. (சி-இ)

### தேர்தல் சட்டத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை தேர்தல்களில் விருப்புவாக்குமுறைத் திட்டத்திற்கு அமைச்சர் ஹமீத் எதிர்ப்புதெரிவித்துள்ளாராம்.

### பலாலியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொது மன்னிப்பின் அடிப்படையிலேயே மேற்படி தமிழ் இளைஞர்கள் விடுதலைசெய்யப்பட்டதாகவும் அவர் கூறினர். (சி-இ)

### இலங்கைத்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசு இடைக்கால அவசரகாலச் சட்டத் திருத்தங்களையும், இராணுவ திருத்தச் சட்டங்களையும் தற்போது நடைபோது நடைமுறைப்படுத்த முற்பட்டுள்ளது என அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (இ-வி)

### மனிதஉரிமை குழு

(1-ம பக்கத் தொடர்ச்சி)

தெரியப்படுத்தலாம்.

இதை இராணுவம் கடைப்பிடிப்பது சந்தேகத்துக்குரியது. ஆகவேதான் இராணுவம் கைதுசெய்யும் எந்த ஒருவரின் விபரங்களையும் உடனுக்குடன் தெரியப்படுத்த வேண்டும் என்று இந்தக் குழுக்கள் அரசை வலியுறுத்தியுள்ளன. (இ-வி)

### மனித உரிமை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்புப் படைகளுக்கு சட்டத்திலிருந்து பாதுகாப்பு வழங்கும் அவசர சட்டங்களே மனித உரிமை மீறல்கள் இலங்கையில் தொடர்ந்து மீறப்படுவதற்கு பிரதான காரணங்கள் என மனித உரிமைகள் குழுக்கள் தெரிவித்துள்ளன.

### புலோலி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்ப்பாட்டம் பேரணி ஒன்று நடாத்தப்பட்டது.

புலோலி வணிகர் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்பேரணி இச்சங்க அலுவலகத்திற்கு முன்பாக காலை 8 மணிக்கு ஆரம்பமானது.

### அனுமதிக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவியும், எதிர்க்கட்சித் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இவ்வாறு தெரிவித்துள்ளார். (இ)

### தடுப்பு முகாம்களில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முன் நீதிமன்றில் முன்னிலை ஆஜர்செய்யப்படவேண்டும்

கைது செய்யப்படுபவர்கள் முன்னர் மூன்று மாதங்களுக்குப்பின்பே நீதிமன்றங்களில் ஆஜர் செய்யப்பட்டனர்.

வெடிமருந்துகளை எடுத்துச் செல்வதற்கு பொதுமக்களை ஈடுபடுத்துவது சம்பந்தமாக பொலிஸ்தலைமை அதிகாரிக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் திருத்தச்சட்டத்தின் மூலம் நீக்கப்பட்டுள்ளது.

வழமையானவிசாரணைகளை நடாத்துதல், பாதுகாப்புச் செயலாளரின் அங்கீகாரத்துடன் சடலங்களை அடக்கம் செய்வதற்கான அதிகாரங்களும் நீக்கப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் இத்தகைய கட்டுப்பாடுகள், பாதுகாப்புப் படையினருக்கும் அரசுக்கும் எதிராக தாக்குதலை நடாத்துபவர்களுக்கு இடையிலான யுத்தத்தில் ஏற்படும் மரணங்கள் சம்பந்தமாகவே அனுசரிக்கப்படும் என்று கூறினார் (வி)


## தமிழீழ காவல்துறை
## பதவி வெற்றிடங்கள்

### உப பரிசோதகர் / காவலர் தரங்கள்

**கல்வித் தகமைகள்:-**

8ம் வகுப்பு தொடக்கம் க. பொ. த. (உயர்தரம்) வரை

உயரம்:- 5' 6''

வயது:- 18 தொடக்கம் 30 வரை

மேற்கூறிய தகமையுடையவர்கள் சான்றிதழ்களுடன் 20—02—93ம் திகதி வரை பழைய பூங்காவிலுள்ள காவல்துறை அலுவலகத்திற்கு நேரடியாகச் சமூகம் தரவும். தபால்மூல விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஆண் / பெண் இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.

இதுவரை விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாதவர்களும், நேர்முகத்தேர்வின் இறுதித் தேர்விற்கு அழைக்கப்படாதவர்களும் உடனடியாகச் சமூகம் தரவும்.

பா. நடேசன்,
பொறுப்பாளர்,
காவல்துறை,
தமிழீழம்.

(எ-2868)



## பாலாஜி புத்தகசாலை

27, மின்சாரநிலைய வீதியில் இருந்து 11-2-93 முதல் 16, பஸ்நிலையம் யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் இயங்குமென அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் வெளியீட்டாளர்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்

பாலாஜி புத்தகசாலை
16, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்

(எ 2875)



தலையாளி அருள்மிகு
ஸ்ரீ ஞானவைரவர் ஆலய 10-ம் நாள்
## அலங்கார உற்சவம்

★ விசேட நிகழ்ச்சிகள் ★

பி. ப. 4.30 மணிக்கு
சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
அவர்கள்
"திருக்கோவில் பண்பாடு"
என்னும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றுவார்
தொடர்ந்து
வெள்ளிவிளாசக் கலைஞர்கள்
வி. கே. கானமூர்த்தி வி. கே. பஞ்சமூர்த்தி
அவர்களின்
நாதஸ்வரக் கச்சேரியுடன்
வைரவர் பெருமான் பிள்ளையார் சகிதம் முத்துச் சப்பறத்தில் வீதிவலம் வருவார்

தேவஸ்தான வித்துவான் சுரஞானசோதி
க. சிவதாஸ் குழுவினரின்
★ மங்கள இசை ★
திருமதி மிதிலா விவேகானந்தன் அவர்களின்
★ இசைக்கச்சேரி ★
கலாவினோதன் எஸ். கணபதிப்பிள்ளை (சின்னமணி)
வழங்கும்
★ வில்லிசை ★
"பட்டினத்தார்"

அடியார்கள் ஞானவைரப் பெருமானின் இஷ்ட சித்தியைப்பெற்று ஏதுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

இங்ஙனம்
தலையாளி அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் ஆலய
இந்து இளைஞர் மன்றம்
தலையாளி, கோக்குவில். (சி-7226)


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் விதாசபனத்தாரால், யாழ்ப்பாணம் இலங்கோவில் மேற்கு வீதி, 63 ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, SriLanka under Licence Nnmber B/10336/B